சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

1.5.2 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறிப்பிட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 57 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்து உருப்படியொன்றின் மொத்த கிரயத்துடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க கிரயத்தை கொண்டதாக அந்த உருப்படியின் பாகங்கள் தனித்தனியாக அடையாளம் காணப்பட வேண்டிய போதிலும், மொத்தக் கிரயம் ரூபா 134,683,729 ஆன நிலாவெளி பயிற்சி நிலைய	விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது, மட்டக்களப்பு விலை மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களால் தொடர்புடைய விடயங்களுக்காக நிலாவெளி பயிற்சி நிலையத்திற்கு அறிக்கையிட்டுள்ளார். அந்த	சொத்துக்கள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும்.

	கட்டிடத்துடன் 7 ஏக்கர் 37 பேர்ச் காணி, காணி மற்றும் கட்டிடமாக தனித்தனியாக மீளாய்வாண்டின்போது இனங்காணப்பட்டு கட்டிடத்தின் பெறுமானத் தேய்வுப் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.	அறிக்கைகளை வழங்கிய பிறகு, கட்டிடங்களின் பெறுமானத்தேய்வு கணக்கிட்டு அவற்றுக்கு தனித்தனியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 86 ஆம் பந்தியின் பிரகாரம், காலப்பகுதியின் ஆரம்பம் மற்றும் இறுதியில் கொண்டு செல்லும் பெறுமதிகளின் சேர்த்தல்கள், அகற்றல்கள், சுவீகரிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தி ஒப்பிடப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் கீழ் நிலவும் பொத்துவில் சுற்றுலா விடுதி மீளாய்வாண்டினுள் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களினுள் சரியான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பொத்துவில் சுற்றுலா விடுதி 2024 பெப்ரவரி 29 ஆந் திகதி அன்று வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு முறையாக ஒப்படைக்கப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கட்டிடத்தின் பெறுமதி திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டுள்ளது. மேலும், அதன் உபகரணங்களின் மதிப்பு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் அலுவலக உபகரணங்களின் கீழ் சீராக்கப்பட்டுள்ளது.	கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு முதல் சமுர்த்தி நிவாரணங்கள் இல்லாதிருந்தமையின் அடிப்படையில் நிதியத்தின் பிரதான வருமானமான பங்களிப்பு பணம் கிடைக்காமை கணக்கீட்டு கொள்கைகளினுள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வாண்டில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி நிதியத்திற்கான பங்களிப்புகள் கிடைக்கப்பெறாமை தொடர்பிலான விடயங்களை வெளிப்படுத்த முடியாமல் போனது ஒரு தவறுதலாகும்.	கணக்கீட்டு கொள்கைகள் சரியாக வெளியிடப்பட வேண்டும்.
(ஆ)	நிலையான சொத்துக்களின் கீழ் அலுவலக உபகரணங்களாக 13 மாவட்டங்களுக்கு தொடர்புடைய ரூபா 1,248,798 கூட்டுத்தொகையான 1998 ஆம் ஆண்டு முதல் முன்னோக்கி கொண்டு செல்லப்பட்ட மீதியொன்றில் சொத்துக்கள் இனங்காணப்பட்டு, மீளாய்வாண்டின் போது நியாயப் பெறுமதியில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் தேறிய தேறக்கூடிய பெறுமதி 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 68,580 ஆக இருந்தது.	இது தொடர்பாக சம்பந்தப்பட்ட 13 மாவட்டங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு நிலுவைகளை சரியாகக் கண்டறிந்து நியாயமான மதிப்பில் கணக்கீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.	சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு, நியாயமான பெறுமதியில் கணக்கு வைக்கப்பட வேண்டும்.

(இ)	ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மீளாய்வாண்டில் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு ரூபா 570,391 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தாலும், தொடர்புடைய நிலையான சொத்துக்களுக்கான அட்டவணைகளை பரிசோதனை செய்தபோது, அந்த ஆண்டில் கொள்வனவுகள் ரூபா 482,742 ஆக இருந்தது. அதன்படி, ரூபா 87,648 தொகை அச்சுப் பிரதி இயந்திரங்களின் பழுதுபார்த்தல் மீளாய்வாண்டில் அலுவலக உபகரணங்களின் கொள்வனவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டில் செலவினம் ரூபா 87,648 இனால் குறைத்து காண்பிக்கப்படுவதால், மிகை அதிகமாகக் காட்டப்பட்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளபடியாக அலுவலக உபகரணங்களின் பெறுமதியும் அதே பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.	அச்சுப் பிரதி இயந்திரங்களை பழுதுபார்க்கும் போது நீடித்து உழைக்கும் உதிரிப்பாகங்களைச் சேர்ப்பது அவசியமாக இருந்ததால், அது ஒரு மூலதனச் செலவாகக் கருதப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் சேர்க்கப்பட்டது.	செலவுகள் சரியான வகைப்பாட்டின் படி கணக்கு வைக்கப்பட வேண்டும்.
(ஈ)	2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய ரூபா 804,288 கணக்காய்வுக் கட்டணங்கள் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்களாகக் கணக்கிடப்பட்டன, மேலும் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய கணக்காய்வு கட்டணங்களுக்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.	2024 ஆம் ஆண்டுக்கான செலவின மதிப்பீடுகளில் “ஒப்பந்த சேவைகள்” என்பதன் கீழ் கணக்காய்வு கட்டணங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.	செலவினங்கள் முறையாகக் கணக்கு வைக்கப்பட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் நிதி செயலாற்றல் கூற்றின் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்கான ஏனைய செலவுகள், நிர்வாகச் செலவுகள் மற்றும் தொழில்நுட்பக் குழுக் கொடுப்பனவுகள் தொடர்பான ரூபா 8,787,419 கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் செலவு மதிப்பு அந்தத் தொகையால் அதிகமாகக் குறிப்பிடப்பட்டு, ஒட்டுமொத்த மிகையும் அந்தத் தொகையால் குறைவடைந்திருந்தது.	திருகோணமலை மற்றும் மொனராகலை மாவட்டங்களில், வழிமுறை நடைமுறை நடைமுறைப்படுத்தப்பட்ட வங்கிகளில் இந்த நன்மை கொடுப்பனவுகள் தொடர்பான எழுத்து மூலமான கோரிக்கைகள் 2024 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டதால், மாவட்ட மட்டத்தில் கொண்டு வரப்பட்ட தகவல்களின்படி, இந்த கொடுப்பனவுகள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. பெறுகை நடவடிக்கைகள் திணைக்களத்தின் தலைமை கணக்காளர் பிரிவால் செய்யப்படுவதால், தொழில்நுட்பக் குழு கொடுப்பனவுகளை செலுத்துவது தொடர்பான	-மேற்படி-

		ஆவணம் 2024 ஆம் ஆண்டில் தலைமை கணக்காளரால் வழங்கப்பட்டதால், அந்த செலவினம் 2024 ஆம் ஆண்டு செலவினத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.	
(ஊ)	நிதிச் செயலாற்றல் கூற்றில் செயற்பாடற்ற வருமானத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்கான முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 309,619,189 அதிகமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டிற்கான மொத்த மிகை அந்தத் தொகையால் அதிகரித்துள்ளது.	நிதிச் செயலாற்றல் கூற்றில் அறிக்கையில் முதலீட்டு வட்டி வருமானம் ஆண்டுக்கான முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 1,552,658,284 என்பது.	வருமானங்கள் முறையாகக் கணக்கு வைக்கப்பட வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2019 ஆம் ஆண்டில் புதிய மானியமாக 6 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத்தொகையிலிருந்து ரூபா 8,539,272 ஆன தொகையொன்று முற்பண நிதியத்தில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், உரிய முற்பணங்கள் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	2019 ஆம் ஆண்டில் புதிய மானிய உரிமைகளை விநியோகிப்பதற்காக மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத்திலிருந்து, முற்பணத்தைத் தீர்ப்பதற்காகத் திணைக்களக் கணக்கிற்கு அனுப்பப்பட்ட 06 மாவட்டங்களின் பணத்தில் தற்போது நிதியத்திற்கு மாற்றப்படாத ரூபா 8,539,272 தொகை இவ்வாறு நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது.	தொடர்புடைய முற்பணம் ஆண்டினுள் தீர்க்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு		இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் (i) 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம்				
	877(1)(இ)	(i)	எதிர்வரும் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட	2025 ஆம் ஆண்டிற்கான நிதிச் வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை	

		ஆவணம் தயாரிக்கப்பட்டு நடப்பாண்டின் செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் பொது திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய வரவு செலவுத் திட்டத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் பிரதியொன்று அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	ஆவணம் தயாரிக்கப்பட்டு, நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் பொது திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தலைமை கணக்காளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக .	பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
		(ii) நிதியத்தின் செலவினங்களுக்கு மாத்திரம் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த நிதியத்தின் தற்போதைய முக்கிய வருமானம் முதலீட்டு வட்டி வருமானம் மற்றும் நிலாவெளி வருமானம் ஆகும். அதன்படி, வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ)	நிதியத்திற்கான நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பேணிச் செல்லப்படும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயலாற்றல் அறிக்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை பிரகாரம் நிதியத்திற்காக தனிப்பட்ட செயலாற்றல் அறிக்கை யொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 804,478,750 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 258,580,310 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 545,898,440 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. பங்களிப்புத்தொகை குறைவடைந்தமை இப்பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2016 ஜூலை 29 ஆந் திகதிய அமப/16/1392/711/023-II ஆம் இலக்கமுடைய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சேவா லங்கா மன்றத்திற்குரிய நிலாவேலி, கோபாலபுரத்தில் உள்ள 7 ஏக்கர் 37 பேர்ச் நிலத்தையும், அதில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவற்றை ரூபா 126 மில்லியன் பெறுமதிக்கு சமூக பாதுகாப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் பெற்றுக்கொண்டிருந்தது. கையகப்படுத்தல் செயல்முறை முடிந்ததும், திவி நெகும பயனாளிகள், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஒற்றை மாத குடும்பக் குழுக்களின் வருமான நிலை மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வலுவான பயிற்சித் திட்டங்களை நடத்தும் நோக்கத்துடன் இது பராமரிக்கப்பட்டது. இருப்பினும், மீளாய்வாண்டில், இதுபோன்ற பயிற்சித் திட்டங்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே நடத்தப்பட்டன, மேலும் கடந்த 3 ஆண்டுகளாக நிலையத்தின் வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வின்படி, நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பெரும்பகுதி நிலையத்திற்கு செலவிடப்பட வேண்டியிருந்ததுடன் நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் நிலாவெளி பயிற்சி நிலையத்தை பராமரிப்பதற்கான நோக்கங்கள் திறம்பட நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டில் நிலவெளியின் வருமானம் ரூபா 5,662,916 ஆக காணப்படுவதுடன், செலவினங்கள் ரூபா 7,824,370 என குறிப்பிடப்பட்டுள்ளது, இது மீண்டெழும் செலவினங்கள் மற்றும் மூலதனச் செலவு இரண்டின் கூட்டுத்தொகையாகும். இந்த நிலையத்தின் மீண்டெழும் செலவினம் ரூபா 3,382,023 என்பதால், 2024 ஆம் ஆண்டில் இது ரூபா 2,280,893 ஆன இலாபத்தை ஈட்டியுள்ளது என்பது.	குறிக்கோள்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியின் 6(9) ஆம் பந்திக்கு இணங்காத வகையில் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் தலைவராகச் செயல்படும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் கூட்டங்களுக்காக	2020 ஜனவரி 24 ஆந் திகதி பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் நாயகத்தினால் 2022 சனவரி 05 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகமைய 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி நம்பிக்கைப் பொறுப்பு	நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியின் பிரகாரம், பதிற்கடமை படியொன்று செலுத்தப்படக்கூடாது மற்றும் கூடுதல்

பெற்றுக்கொள்ளப்படும் படிகளுக்கு மேலதிகமாக 2020 பெப்ரவரி முதல் 2023 ஒக்தோபர் வரையிலும் ரூபா 984,322 தொகையும், அதாவது திணைக்களத்தின் நிரந்தர பதவியின் அடிப்படை சம்பளத்தில் ¼ கடமைகளை நிறைவேற்றுவதற்காக பெற்றுக்கொண்டிருந்ததுடன், தற்போதைய தலைவர் 2023 நவம்பர் முதல் 2024 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 386,737 பதிற்கடமை படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.	சபைக்கு விடயங்களை முன்வைத்த பின்னர் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அந்த பணிப்பாளர் நாயகத்திற்கு நியமனத் திகதியன்று அன்று அறங்காவலர் குழுவிடம் உண்மைகளைச் சமர்ப்பித்த பின்னர் அதாவது 2020 ஜனவரி 24 முதல் 2022 பிப்ரவரி 24 வரை நிலுவை தவணைகளாக சம்பளத்தில் ¼ தொகை ரூபா 22,000 படியாக 26 மாதங்களுக்கு ரூபா 550,000 மற்றும் அத்திகதி முதல் 2023 அக்டோபர் 23 வரை மாதாந்த சம்பளத்தில் ¼ அளவானது செலுத்தப்பட்டுள்ளமை மற்றும் 2023 நவம்பர் 02 முதல் நியமிக்கப்பட்ட தற்போதைய பணிப்பாளர் நாயகத்தின் வேண்டுகோளின்படி, சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு சபையின் ஒப்புதலுடன் மாத சம்பளத்தில் ¼ பங்கு செலுத்தப்பட்டுள்ளது. எதிரகாலத்தில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உரித்துறுதியில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் மற்றும் தீர்மானங்கள் எடுக்கப்படும் வரை 2025 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் இந்த கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.	கொடுப்பனவுகள் வசூலிக்கப்பட வேண்டும்.

3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2023 யூலை முதல் சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டம் நிறுத்தப்பட்ட காரணத்தால் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நலன்களை செலுத்தல் நிறுத்தப்பட்டமையால் ரூபா 1,010,000 ஆன செலவினத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட நலன்கள் பிரதிபலன் மொடியுல் மீளாய்வாண்டின் போது விளைவற்றுக் காணப்பட்டது.	சமுர்த்தி சமூக அபிவிருத்தி திணைக்களத்தினுள் சமுர்த்தி நலனாளிகளின் தகவல்களை உள்ளடக்கி பேணிச் செல்லப்படும் CRM தரவுக் கட்டமைப்பை பயன்படுத்தி சமுர்த்தி சமூக அபிவிருத்தி நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் சமூக	சொத்துக்களை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	பாதுகாப்பு நலன்களை செலுத்துவதற்காக மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்காக நம்பிக்கைப் பொறுப்பு சபைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. 2023 யூலை 01 ஆந் திகதி முதல் அச்வெசும நலன்கள் முன்மொழிவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமையால், சமுர்த்தி நிவாரணங்கள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக வழங்குதல் நிறுத்தப்பட்டதுடன், அதற்கமைய சமூக பாதுகாப்பு நலன்களை செலுத்துதலும் நிறுத்துவதற்கு நேர்ந்துள்ளது என்பது.	

3.3 செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) இந்த நிதியத்தின் முக்கிய நோக்கமாக சுய வாழ்க்கை நிலைமைகள் ஏதோ ஒரு வகையில் மோசமடைவதற்கு மிக அருகில் இருந்த தகுதியுள்ள குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதாகும், இது அத்தகைய பின்தங்கிய நிலைமைக்கு எதிரான பாதுகாப்பு நடைமுறையொன்றாக இருந்தது. இதன் கீழ், முக்கியமாக பிறப்புகள், பல பிறப்புகள், திருமணங்கள், மருத்துவமனையில் சேர்க்கப்படுதல், சரண மற்றும் சிபதொர புலமைப்பரிசில் போன்ற எதிர்பார்க்கப்படும் மற்றும் எதிர்பாராத நிகழ்வுகளுக்கான காப்பீட்டு வழிமுறையாக சலுகைகள் வழங்கப்பட்டன. இருப்பினும், சமுர்த்தி சலுகைகள் நிறுத்தப்பட்டதால், மீளாய்வாண்டில் பிரதிபலன் கொடுப்பனவு ரூபா 1,422,446,050, இனால் அதாவது 68 சதவீதத்தினால் குறைந்துள்ளது. இருப்பினும், இந்த ஆண்டிற்கான பிரதிபலன் கொடுப்பனவுகளில் 2023 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவுகளும் அடங்கும். மேலும், மீளாய்வாண்டில் பிரதிபலனீ கொடுப்பனவுகள் சிப்தொர	சமூக அபிவிருத்தி நிதியத்தால் செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்புப் பிரதிபலன் கொடுப்பனவுகளில், சிப்தொர புலமைப்பரிசில் திட்டம் 2024 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது, மேலும் நலன்புரி பெறாத சமுர்த்தி பயனாளிகளாக இருந்த குடும்பங்கள் மட்டுமே அந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டதால், இந்த ஆண்டு பிரதிபலன் கொடுப்பனவுகள் குறைந்துள்ளது என்பது.	நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் முதலீடுகள் ரூபா 794,943,365 இனால் அதிகரித்துள்ளன. அதன்படி, மீளாய்வாண்டில் நிதியத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		
(ஆ)	மீளய்வாண்டில் பங்களிப்புகள் கிடைக்காமையால் மிகை கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 1,581,644,268 இனால் அதாவது 68 சதவீதத்தினால் குறைந்துள்ளது. அதன்படி, இந்த நிதியத்தை தொடர்ந்து பராமரிப்பதில் சிக்கல் இருப்பது அவதானிக்கப்பட்டது.	தற்போது, இந்த நிதியத்தினி முக்கிய வருமானம் முதலீட்டு வட்டி மற்றும் நிலாவெளி பயிற்சி நிலையத்தின் வருமானமாகும். இந்த நிதியம் சமுர்த்தி பயனாளிகளின் மாதாந்த பங்களிப்புகளிலிருந்து கட்டமைக்கப்பட்டுள்ளதாலும், குறைந்த வருமானம் பெறுபவர்களின் நல்வாழ்வுக்காக இலாப நோக்கற்ற அடிப்படையில் இந்த நிதியம் நிறுவப்பட்டதாலும், இந்த நிதியத்தை தொடர்ந்து பராமரிப்பதற்கும் குறைந்த வருமானம் பெறுபவர்களின் நல்வாழ்வுக்காக செலவுகளைச் செய்வதற்கும் எந்தத் தடையும் இல்லை.	நிதியத்தின் தொடர்ச்சியான நிலவுகையை உறுதி செய்வதற்கும் பங்களிப்புகளைச் செலுத்திய பயனாளிகளின் நலனை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.